# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2417 - 2024 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2024.12.27

2417 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தயோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்னைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் **அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, சனவரி மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.""

கங்கானி லியனகே,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2411A - B082635 - 5,403 (2024/12)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.**

*கம்பனியின் பெயர்* : மன்ஸ்ராம் (சிலோன்) (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 17746
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல.25,ரைன்லேண்ட் பிளேஸ், கொழும்பு 03
*குறைக்கப்படுவதற்கு முன் கூறப்பட்ட மூலதனம்* : ரூ. 208.000,00
*குறைக்கப்பட்டதன் அடிப்படையில் கூறப்பட்ட மூலதனம்* : ரூ. 40 குறைப்புத் தொகை ரூ. 207,980,00

டீ எஸ் கோர்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவட்)
லிமிட்டட் நிறுவனத்தின் செயலாளர்கள்.

இல. 302 ஏ, ரைகம,
பண்டாரகம,

12– 322

---

## பொது அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் ,**

இலங்கை ரூபா முந்நூற்று ஐம்பத்து மூன்று மில்லியன் இருநூற்று இருபது ஆயிரத்து ஐந்நூறு (ரூ. 353,220,500.00) இல் ரூபா இருநூற்று மூன்று மில்லியன் இருநூற்று இருபது ஆயிரத்து ஐந்நூறு( ரூ.203,220,500.00) ஆக குறைப்பு குறித்து PV 84551 ஐக் கொண்ட நிறுவனப் பதிவு எண் கொண்ட Serendip Properties Lanka (Private) Limited (''கம்பனி") இன் கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்பு குறித்து இதன் மூலம் பொது அறிவிப்பு வழங்கப்படுகிறது.

நிறுவனத்தின் பணிப்பாளர்கள் குழு அத்தகைய பங்குதாரர்களுக்காக மேற் கூறிய முன்மொழியப்பட்ட மூலதனக் குறைப்பு குறித்து பரிசீலித்து முடிவெடுப்பதற்காக நிறுவனத்தின் பங்குதாரர்களின் கூட்டத்தைக் கூட்டுகிறது.

வாரியத்தின் உத்தரவின்படி,

Serendip Properties Lanka (Private) Limited,
Spillburg Holdings ( Pvt) Ltd.

செயலாளர்கள்,

2024, நவெம்பா 30.

12– 343

## அறிவித்தல்

### புளூ ஸ்டார் ரியல்டீஸ் (பிரைவட்) லிமிட்டட் முன்மொழியப்பட்ட மூலதனத்தைக் குறைத்தல்

இலங்கை சட்டத்தின் முதலீட்டு வாரியத்தில் 17 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட புளூ ஸ்டார் ரியல்டீஸ் ( பிரைவட்) லிமிட்டட்டின் பங்குதாரர்கள் தங்களது பங்குகளை குறைப்பதற்கு உத்தேசித்திருப்பதுடன், மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்குட்பட்டு நிறுவனத்தில் பணிப்பாளர்கள் குழு மூலதனத்தை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

அதற்கமைய,
புளூ ஸ்டார் ரியல்டீஸ் ( பிரைவட்) லிமிட்டட்டின் பணிப்பாளர்கள் குழு ( நிறுவனம்) நிறுவனத்தில் குறிப்பிடப்பட்ட முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் ரூ. 100,150,000.00 ஐ ரூ.1000.00 ஆக குறைக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனமாக 200,600,000 ஐ தீர்மானித்துள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய குறைத்தல் கூறப்பட்ட மூலதனத்திற்கு மற்றும் அதன் மிகுதிக்கு எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாமல் அதற்கு எதிராக நீடிப்பு ரூ. 100,149,000.00 ஐ செலுத்துவதன் மூலம் செயற்படுத்தலாம்.

முன்மொழியப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கு பங்குதாரர்களுக்கு அனுமதி அளிப்பதற்காக 60 நாட்கள் அறிவிப்பு கொடுக்கப்பட்டு நிறுவனத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

அஸைன்மென்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட் ,
செயலாளர்,
புளூ ஸ்டார் ரியல்டீஸ் ( பிரைவட்) லிமிடட்.

இல. 200/1/1,
பார்க்லேன், ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
இராஜகிரிய,
2024.12.19.

12– 367

---

## பொது அறிவித்தல்

### ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாக மாற்றப்பட்ட கம்பனி

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் இல. 18/3,டொக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை,கொழும்பு 06 என்ற முகவரியில் பதிவு அலுவலகத்தை உடைய மஹாராஜா புட்ஸ் லிமிடெட் ( கம்பனி இல. PB 00296080) 2024,செத்தெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாக (PLC ) மாற்றப்பட்டுள்ளது பற்றி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் ( சட்டம்) 08 ஆம் பிரிவின் விதிகளுக்கு ஏற்ப இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது. கம்பனியானது அதன்பெயர் மற்றும் பதிவு இலக்கத்தையும் மஹாராஜா புட்ஸ் (PQ 00296080) என மாற்றியுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

சார்ட் பிசினஸ் சிஸ்டம்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 09, 03 ஆவது மாடி,
பாடசாலை வீதி,கொழும்பு 03.

12– 406/1

**பொது அறிவித்தல்**

**ஒரு பொதுக்கம்பனியாக மாற்றப்பட்ட கம்பனி**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் இல. 18/3,டொக்டர் ஈ.ஏ. குரே மாவத்தை,கொழும்பு 06 என்ற முகவரியில் பதிவு அலுவலகத்தை உடைய மஹாராஜா புட்ஸ் (பிரைவட்) லிமிடெட் ( கம்பனி இல. PV 89705) 2024, மாச்சு 06ஆந் திகதியிலிருந்து ஒரு பொதுக்கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது பற்றி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் ( சட்டம்) 08 ஆம் பிரிவின் விதிகளுக்கு ஏற்ப இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது. கம்பனியானது அதன்பெயர் மற்றும் பதிவு இலக்கத்தையும் மஹாராஜா புட்ஸ் லிமிடெட் (PQ 00296080) என மாற்றியுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

சார்ட் பிசினஸ் சிஸ்டம்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 09, 03 ஆவது மாடி,
பாடசாலை வீதி,கொழும்பு 03.

12– 406/2

---

**2024,செத்தெம்பர் 18 ஆந் திகதிய அறிவித்தலுக்காக திருத்தங்கள் ( BOLD ITALIC இல் அச்சிடப்பட்டுள்ளது)**

**1996,யூன் 16 ஆந் திகதிய 875/ 9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதும் 2003, யூலை 29 ஆந் திகதிய 1299/ 6 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டதுமான (2003 திருத்தத்தில் உள்ளவாறு) 1995 நிறுவன கையகப்படுத்தல் மற்றும் இணைத்தல் விதியின் கீழான அறிவித்தல்.**

சியெர்ரா கேபிள்ஸ் பிஎல்சியில் 373,931,364 சாதாரண பங்குகளை வாங்குவதற்கு ஐகோனிக் ட்ரஸ்ட் ( பிறைவெட்) லிமிடெட் ( பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ்) பிஎல்சியின் முழு சொந்தமுடைய துணை நிறுவனம்) மூலம் கட்டாய வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது.

**1. வழங்களுக்கான பின்னணி;**

இல.100/ 1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை பெற்றதும் PV 00232531 ஆம் இலக்க கம்பனி பதிவு இலக்கத்தைக் கொண்டதுமான ஐகோனிக் ட்ரஸ்ட் ( பிறைவெட்) லிமிடெட் ( பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிஎல்சியின் முழு சொந்தமுடைய துணை நிறுவனம்) ( இதன் பின் அளிப்பைப் பெறுபவர் என்று குறிப்பிடப்படும்) பங்கு ஒன்று தலா ரூபா 8.00 விலையில் அளிப்பவரிடம் உள்ள மொத்த பங்குகளின் தோராயமாக 1.24% இனை சியெர்ரா கேபிள்ஸ் பிஎல்சி ( இதன் பின் அளிப்பவர் என்று குறிப்பிடப்படும் ) 6,654,899 சாதாரண வாக்கு பங்குகளை கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) வர்த்தகத் தளத்தில் 2024,செத்தெம்பர் 11 ஆந் திகதி வாங்கியது தொடர்பானது; அளிப்பவரின் 30.42% பங்குகளின் (மொத்தம் 163,521, 066 பங்குகள்) மொத்த வைத்திருப்பு ஒன்றை ஏற்படுத்துகின்ற தற்போதிருக்கும் 156,866,167 பங்குகளுடன் ( அளிப்பவர்) பங்குகளின் மொத்த எண்ணிக்கையின் 29.18 %) சேர்த்தது.

கட்டாய வழங்கல் ஒன்றைசெய்வதற்கு கடப்பாடு பெற்றுள்ள ( கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) விதியின் 31 (1) (a) சட்ட விதிமுறைகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 53 ஆவது பிரிவின் கீழ் இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட விதிகளின் கீழ் வெளியிடப்பட்ட ( விதி) திருத்தப்பட்டவாறு)

1995 இன் நிறுவன கையகப்படுத்தல் மற்றும் இணைத்தல் விதியின் மூலம் வைக்கப்பட்ட ஆரம்ப வரம்புகள் அளிப்பை பெறுபவரால் தூண்டப்பட்டது.

அளிப்பைப் பெறுபவரின் பணிப்பாளர் ஒருவரான ( அளிப்பவரின் பணிப்பாளரும் கூட) திரு. எம்.ஏ. பீ. என். வீரசிங்க 2021, சனவரி 25 ஆந் திகதி அளிப்பை பெறுபவரின் பணிப்பாளர் மற்றும் 2022,பெப்புருவரி 11 ஆந் திகதி அளிப்பவரின் பணிப்பாளரான அவர் , 2020, திசெம்பர் மற்றும் 2021, சனவரியில் அவரால் பெறப்பட்ட அளிப்பவரின் தோராயமாக 0.01% கொண்ட 60, 000 வைத்துள்ளார்.

அதன்படி, அளிப்பவரின் வழங்கலில் உள்ள 30.43% கொண்ட 163,581,066 பங்குகளை அளிப்பைப் பெறுபவர் மற்றும் அளிப்பை பெறுபவருடன் செயற்படும் தரப்பு வைத்துள்ளது.

விதிமுறையின் விதி31(1) (a) பின்வருமாறு கூறுகிறது;

''ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியான பரிவர்த்தனைகள் மூலம் எந்தவொரு நபரும் பெற்றுக்கொண்ட அல்லது இல்லையேல், பங்குகளை வைத்திருப்பவர்களுடன் ஒன்றிணைந்து பெறப்பட்ட அல்லது அவ்வாறான நபருடன் கூட்டில் செயற்படும் நபர்கள் மூலம் பெறப்பட்ட பங்குகள் முப்பது வீதம் அல்லது அதற்கு மேல் வைத்திருக்கும் ஒரு நிறுவனம் வாக்குரிமையைப் பெற்றிருக்கும்;

அவ்வாறான நபர் அல்லது அவருடன் இணைந்து செயற்படும் நபர்கள் பங்குகளைவைத்திருப்பது மற்றும் வாக்களிக்கும் உரிமைகளைமேற்கொள்ளும் சாதாரண பங்குகளின் எந்த ஒரு வகுப்பையும் வைத்திருப்பது , இந்த விதிக்கு அமைய வழங்கப்படுவதோடு அவ்வாறான நபர் முப்பத்து ஐந்து நாட்களுக்குள் நீடிக்கப் படலாம்.”

அதன்படி, சாதாரண வாக்குப்பங்குகளின் எஞ்சிய உடைமையாளர்கள் மூலம் பங்கு ஒன்றுக்கு 8.00 ரூபா விலையில் அளிப்பவரின்தோராயமான 69.57% கொண்ட மீதமுள்ள 373, 931, 364 சாதாரண வாக்கு பங்குகளை வாங்குவதற்கு அளிப்பைப் பெறுபவர் கடப்பாடு பெற்றுள்ளார்.

2024,செத்தெம்பர் 11 ஆந் திகதிக்கு உடனடியாக முந்தைய ஓர் ஆண்டு காலப்பகுதியில் அளிப்பவரின் சாதாரண வாக்கு பங்கு ஒன்றுக்காக அளிப்பை பெறுபவர் மற்றும் அளிப்பைபெறுபவருடன்செயற்படும் தரப்பினால்செலுத்தப்பட்ட உச்ச விலையானது ருபா 8.00 உள்ளது.

**2. வழங்கலின் விதிகள்;**

2024,செத்தெம்பர் 11 ஆந் திகதி அளிப்பவரின் பங்குகளை வாங்கிய அளிப்பைப்பெறுபவர் அல்லது அளிப்பைப் பெறுபவருடன்செயற்படும் தரப்பினர் அதனை பங்கு ஒன்று ருபா 8.00 விலை ஒன்றில் எஞ்சியுள்ள 373, 931, 364 சாதாரண வாக்குப் பங்குகளை அளிப்பவரின் பங்குதாரர்களிடம் இருந்து வாங்குவதற்கு அளிப்பைப் பெறுபவர் கூறுவிலையிட்டதோடு அது அளிப்பவரின் பங்கு ஒன்றுக்காக 2023,செத்தெம்பர் 9 ஆந் திகதி தொடக்கம் 2024,செத்தெம்பர் 10 ஆந் திகதி வரையான காலத்தில் அளிப்பைப் பெறுபவர் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

இங்கு பிரதிபலிக்கின்றவாறு அளிப்பைப் பெறுபவர் மூலம் மேற்கொள்ளப்படும் வழங்கலானது வழங்கல் முடிவில் அளிப்பவரின் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்ட அளிப்பவரின் அனைத்து சாதாரண பங்குதாரர் களுக்கும் திறந்திருக்கும்.

**3. அளிப்பைப் பெறுபவரின் அடையாளம்;**

அளிப்பைப் பெறுபவர் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2020, திசெம்பா 30ஆந் திகதி வரையறுக்கப்பட்டபொறுப்புடைய கம்பனி ஒன்றாக கூட்டிணைக்கப்பட்டிருந்ததோடு பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிஎல்சியின் முழு சொந்தமுடைய துணை நிறுவனமாகும்.

அளிப்பைப் பெறுபவரின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ளது.

அளிப்பைப் பெறுபவரின் பணிப்பாளர்கள்;
திரு. டி.எஸ்.கே. அமரசேகர,
திரு.கே. ஏ.கே.பீ. குணவர்தன,
திருமதி வி.ஜி.எஸ்.எஸ்.கொட்டகதெனிய,
திரு. எம். ஏ.பீ.என். வீரசிங்க.

அளிப்பைப்பெறுபவரின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 10 , இது 01 சாதாரண வாக்குப்பங்கை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

மூலோபாய முதலீடுகளின் வைத்திருப்பு நிறுவனம் ஒன்றாக செயற்படுவது அளிப்பைப்பெறுபவரின் முக்கிய செயற்பாடாகும். சியர்ரா கேபிள்ஸ் பிஎல்சியில் பங்குகளை வைத்திருப்பதற்கு அப்பால், பிரவுன்ஸ் டெவெலொப்மன்ட் லிமிடெட் ( முன்னர் சியெர்ராடெவலொப்மன்ட் லிமிடெட் என அறியப்பட்டது) மற்றும் சன்சுன் புட்டிகஹோடேல்ஸ் லிமிடெட்டின் மொத்த பங்குகள் அளிப்பைப் பெறுபவருக்கு சொந்தமாகும்.

**4.அளிப்பவர் நிறுவனத்தில் தற்போதுள்ள பங்குதாரர்கள்;**

| | |
|---|---|
| (aa) அளிப்பைப் பெறுபவருக்கு சொந்தமான அல்லது அளிப்பை பெறுபவர் கட்டுப்பாட்டில் உள்ள அளிப்பவர் பங்குகளின் எண்ணிக்கை | 163,521,066 |
| (bb) அளிப்பைப்பெறுபவருடன் கூட்டில் செயற்படும் எந்த ஒரு நபர் மூலமும் கட்டுப்படுத்தப்படும் அல்லது சொந்தமான அளிப்பவர் பங்குகளின் எண்ணிக்கை | 60,000 |
| (cc) வழங்கலை ஏற்பதற்கு எந்த ஒரு பங்குதாரர் மூலமும் பொறுப்பை ஏற்ற அளிப்பைப் பெறுபவர் வைத்திருக்கும் வகையிலான அளிப்பவா பங்குகளின் எண்ணிக்கை | இல்லை |

**5. அளிப்பவரின் நிபந்தனைகள்;**

மேல் குறிப்பிட்டவாறு, அளிப்பைப்பெறுபவரின் மற்றும் அளிப்பைப்பெறுபவருடன்செய்ற்படும் தரப்பின் பங்கானது 163, 581, 066 ஆக இருப்பதோடு இது அளிப்பவரின் 30.43 % பங்குகளின்மொத்தவைத்திருப்பு ஒன்றைக் கொண்டுள்ளது.

விதி 31(2)விதி முறையின்படி, அளிப்பைப் பெறுபவர் வாக்கு உரிமையின் ஐம்பது வீதத்திற்கு மேல் (50%) வைத்திருப்பதுடன் ஒத்துழைப்பு செயற்பாட்டில் உள்ள நபர்கள் மற்றும் அளிப்பைப்பெறுபவர் காரணமாக பங்குகளை வாங்கியது அல்லது வழங்கல் காலத்தில் அல்லது அதற்கு முன்னர் வாங்குவதற்கு இணங்குவதுடன் சேர்த்து குறித்த பங்குகளை அளிப்பைப்பெறுபவர் ஏற்புகளைபெறும் நிபந்தனையின் கீழ் மாத்திரமே 31 ஆம் இலக்க விதியின் கீழ் வழங்கல்மேற்கொள்ளப்படும்.

''நிபந்தனையற்ற ஏற்றுக்கொள்ளல் " என்பது; பங்குகளை வாபஸ் பெறுவதற்கான தமது உரிமையை அளிப்பவரின்

பங்குதாரர்கள் இழக்கும் அதேநேரம் அனைத்து பங்குகளினதும் கூறுவிலையிடப்பட்ட விலையை அளிப்பைப் பெறுபவர் செலுத்துவதை ஏற்றல் வேண்டும்.'' எனப் பொருள்படும்.

அளிப்பைப் பெறுபவர் ஏற்றுக்கொள்ளல்களைப்பெறாவிட்டாலும் பெறப்பட்ட எந்தவொரு செல்லுடியாகும் ஏற்பையும் ஏற்றுக் கொள்வதற்கும் பணம் செலுத்துவதற்கும் அளிப்பைப் பெறுபவர் இதன் மூலம் இணங்குதோடு, இதன் காரணமாக அளிப்பைப் பெறுபவர் வாக்குரிமைகளின் 50% இற்கு மேற்பட்ட பங்குகளை வைத்துள்ளார்.

ஒரு பங்குதாரரால் "ஏற்றுக்கொள்வது" என்பது உருப்படி 6 இல் கூறப்பட்டுள்ள வழங்கல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடைமுறையின்படி ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**6. வழங்கலின் மேலதிக விபரங்கள்;**

மேற் கூறிய நிறுவன கையப்படுத்தல் மற்றும் இணைப்புக்கள் விதியின் அடிப்படையில் வழங்கல் திறந்திருக்கும் காலம் உட்பட ஏனைய தொடர்புடைய தகவல்களை வழங்கும் விரிவான கட்டாய வழங்கல் ஆவணம் ஒன்று கட்டாய வழங்கலை மேற்கொள்வதற்கான கடப்பாடு பொறுப்பேற்கப்பட்ட திகதியில் இருந்து முப்பத்தைந்து (35) நாட்களுக்குள் அளிப்பவரின் அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுப்பப்படும்.

தபால் தாமதம் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் கட்டாய வழங்கல் ஆவணத்தில் பிரதி ஒன்று கிடைக்கப்பெறாத பங்குதாரர்கள், வழங்கல் பதிவாளர்கள், SSP Corporate Sevices ( Private) Limited, இல. 546/ 7, காலி வீதி,கொழும்பு 3,தொலைபேசி இல. 011– 2573485/ 011– 2574798,தொலை நகல் ; 011– 2573037 என்ற முகவரியில் இருந்து கட்டாய வழங்கல் ஆவணத்தின் பிரதி ஒன்றைபெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தப் படுகின்றனர்.

இந்த அறிவுறுத்தல் சபையால் பார்த்து அங்கீகரிக்கப்பட்டது என்பதையும், இந்த அறிவித்தலில் தரப்பட்டிருக்கும் விபரங்களை துல்லியம் மற்றும் முழுத்தன்மைக்கான பொறுப்பை கூட்டாக மற்றும் தனிப்பட்ட முறையில் ஏற்போம் என்பதையும் தமக்கு தெரிந்து வேறு உண்மைகள் இல்லை என்பதோடு தவறாக வழிநடத்தும் எந்த ஒரு அறிக்கையும் நீக்கப்பட்டதை உறுதிசெய்தும் அளிப்பைபெறுபவரின் பணிப்பாளர்கள் சபை இத்தால் அறிவிக்கினறது.

சபை ஆணைப்படி,

ஐகோனிக் ட்ரஸ்ட் ( பிறைவெட்) லிமிடெட்,
பணிப்பாளர்.

திருத்தங்கள் 2014,செத்தெம்பர் 18 ஆந் திகதி இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்னை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு 2024, நவெம்பர் 12 ஆந் திகதி வெளியிடப்பட்டது.

12– 419

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது